**O.S.No. 232/2013**

**DW4 :** சரஸ்வதி தேதி 23.02.2026

பிவாசா 4 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு,10 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

தங்கவேல் என் தம்பி. அ வ எண்.621/1991 என்ற வழக்கை பாகபிரிவினை கோரி தாக்கல் செய்தாரா என்றால் ஆம். அது தீர்ப்பாகி அதன்படி அவரவர் சுவாதீனம் எடுத்து கொண்டார் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த வழக்கில் நான் ஆஜராகவில்லை. அதில் நான் எதிர் வாதம் செய்யவில்லை. 10 ம் பிரதிவாதி 21.6.2021 சொத்து வாங்கி அனுபவிப்பதில் எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் அவர் கிரையம் வாங்கியதை குறித்து எனக்கு தெரியாது. 10 ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்தில் சுவாதீனத்தில் இருக்கிறார் என்றால் சரியல்ல. சாட்சி பின்னிட்டு எனக்கு தெரியாது என்று கூறினார். 10 ம் பிரதிவாதி எவ்வளவு விஸ்தீரணத்தில் செக்கு பந்தி குறித்து தெரியாது. அவர் வாங்கிய பூமியில் கம்பி வேலி அமைத்து அனுபவத்து வருகிறார் என்றால் தெரியாது. 10 ம் பிரதிவாதி பெற்ற கிரையத்தை நான் ஆட்சேபணை செய்ய இயலாது என்றால் அது எனக்கு தெரியாது. 10 ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய பெற்ற சொத்தை திருப்பி கொடுப்பதில் எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அ வ எண்.621/1991 வழக்கின் தீர்ப்பு என்னை கட்டுப்படுத்தும் என்றால் அது எனக்கு தெரியாது.

16 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

5 ம் பிரதிவாதி தங்கவேல் என் உடன் பிறந்த தம்பி. அ வ எண் 621/1991 பற்றி எனக்கு தெரியாது. அதில் முதல் நிலை தீர்ப்பாகி சொத்துகள் அவரவர்களுக்கு பிரிக்கப்பட்டது என்றால் தெரியாது. அ வ எண் 621/1991 வழக்கின் விவரம் என் தந்தைக்கு தெரியும். என் தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்துகளை என் அக்கா தங்கம்மாளுக்கு எழுதி வைத்துவிட்டார் என்ற

விவரம் எனக்கு தெரியும். அதனால் என் அப்பாவிற்கு எந்த பங்கு பாத்தியமும் இல்லை என்று சொன்னால் மீதி சொத்தில் பங்கு உள்ளது. 7.12.2004 ம் தேதி என் தந்தை எனக்கு 1.20 ஏக்கர் தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். பங்கு பாத்தியம் என் அப்பாவிற்கு இல்லாத நிலையில் எனக்கு 1.20 ஏக்கர் எழுதி கொடுக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. எனக்கு எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் படி 7.1.2008 ல் துரைசாமிக்கு எழுதி கொடுத்த கிரையம் செல்லாது என்றால் சரிதான் என்னை ஏமாற்றி கிரையம் வாங்கி கொண்டார். 16 ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் 1/6 பாத்தியம் இருப்பதை நான் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரிதான்.